# <u>IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR</u>

## O.S. No. 67/2012

Deposition of **<u> PW.1 </u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tr. G. Mahavishnu, Gr. III Bench Clerk of this court, on 26.11.2025 in accordance with the provision of Act 1 of 1873.

Name : ராஜேந்திரன் Father's Name : அழகப்பன்

துவக்க நேரம்: 01.03 P.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

**<u>சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு, பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>**

1. ச.எண்.274/1-ல் உள்ள நிலமானது எனது இதர சொத்துகளுக்கு கிழக்கில் அமைந்துள்ளது என்றால் சரிதான். எனது நிலத்திற்கு மேற்கில் அமைந்துள்ள சொத்துக்கள் எனக்கும், பிரதிவாதிக்கும் தனிதனி தானசெட்டில்மெண்ட் மூலம் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். ச.எண்.274/1-ல் உள்ள நிலத்தில் உள்ள 15 அடி அகல பாதை தொடர்பாகத்தான் இந்த வழக்கில் பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் சரிதான். தாவா B அட்டவணை சொத்து எனது நிலத்திலும், பிரதிவாதி நிலத்திலும் செல்வதாக எனது வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

2. தாவா B அட்டவணை வண்டித்தடமானது எத்தனை ஆண்டுகளாக உள்ளது என்றால் எங்களுக்குள் கடந்த 1997-ல் பாகம் பிரித்துக்கொண்டதிலிருந்து உள்ளது. நான் எந்த ஆவணத்தில் அடிப்படையில் B அட்டவணை சொத்தின் வண்டிப்பாதையில் உரிமை கோரியுள்ளேன் என்றால் பாகப்பிரிவினைப்பத்திரத்தின்மூலம் உரிமை கோரியுள்ளேன். மேற்படி பாகப்பிரிவினைப்பத்திரத்தில் எந்ததெந்த சர்வே எண்களில் எவ்வளவு நீள அகலத்தில் பாதை உள்ளது என்ற விவரங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால்

சரியல்ல, வண்டிவாகனங்கள் செல்ல வழிதடம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி பாகப்பத்திரத்தில் தாவா B அட்டவணையில் கண்டுள்ள வண்டித்தடம் பற்றி குறிப்பிடாத நிலையில் அதனடிப்படையில் இந்த வழக்கு தாக்கல் செய்ய எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. தாவாவில் B அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து விவரம் தவறானது என்றாலும் B அட்டவணை சொத்தே இல்லை என்றாலும் சரியல்ல.

பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

முடிவு நேரம்: 01.15 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him /her to be correct

Sd/- D. Jansi Rani,
Principal District Munsif (FAC), Attur.

Typed by Selvi. C. Sasikala - O.S. No.67/2012, Dt.26.11.2025.